கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 194/2025**

திரு.கார்த்திகேசன் (P.W. –1) **13.02.2026**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி.**

ஏற்கனவே என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. கீழ்கண்ட ஆவணங்களை வாதி தரப்பில் குறியீடு செய்யவேண்டும்.

1. 20.12.2021 மகாலிங்கம் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தின் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ– 1

2. 11.03.2003 – மகாலிங்கம் இறப்பு சான்றிதழ் – ஒளி நகல் – வா.சா.ஆ– 2

3. 30.04.2003 – மகாலிங்கம் வாரிசு சான்றிதழ் – ஒளி நகல் – வா.சா.ஆ– 3

4. 05.02.2003 – பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில் மெண்ட் ஆவணம் – சான்றிட்ட நகல்– வா.சா.ஆ– 4

5. 29.07.2022 – பிரதிவாதி, மங்கையகரசி ஆகியோர் வாதி பெயரில் ஏற்படுத்திகொடுத்த கிரைய ஒப்பந்த ஆவணம்( கிரைய ஒப்பந்த ஆவணத்தில் அசல் வாதியிடம் உள்ளதாக கூறுகிறார். அசல் ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக இருப்பதாக கூறுகிறார்) – சான்றிட்ட நகல்– வா.சா.ஆ– 5

6. 18.03.2005 – வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு – வா.சா.ஆ– 6

7. 20.03.2021 – சட்டஅறிவிப்பு சார்வு ஆகாமல்திரும்பி வந்த கவர் – வா.சா.ஆ–7

8. வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது – ஒளி நகல் – வா.சா.ஆ– 8

9. பிரதிவாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது – ஒளி நகல் – வா.சா.ஆ–9

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.